**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,சிங்கம்புணரி.**

முன்னிலை: திருமதி. G.அபர்ணா M.A.,LLM.,B.Sc.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,சிங்கம்புணரி.

2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ம் நாள் புதன்கிழமை.

(2057 திருவள்ளுவர் ஆண்டு ஸ்ரீ பராபவ வருடம் சித்திரை திங்கள் 08 ம் நாள்)

**அசல் வழக்கு எண்:255/2019**

**CNR No: TNSV160006132019**

*****

கா.ஜெகஜோதி பெரியகருப்பன் .... வாதி

/எதிர்/

1. ரா.ராஜாராம்
2. ரா.நல்லகருப்பன் (எ) கருணாநிதி
3. ரா.நீலாவதி
4. ரா.ராகினி
5. ரா.மருந்தாயி
6. ரா.நவமணி
7. கா.கொப்பாள்
8. கா. மருந்தாயி
9. கா.ஒய்யம்மாள்
10. கா.ஜெயமணி
11. கா.ஜெயலலிதா .... பிரதிவாதிகள்

(இடைநிலை மனு எண்: 2/2023 நாள்:30.04.2024 படி பிராது திருத்தப்பட்டது)

இந்த அசல்வழக்கு திருப்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 19.09.2017–ஆம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு, அன்றே அசல் வழக்கு எண்.118/2017 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு, பின்னர் இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, இந்நீதிமன்றத்தில் அசல்வழக்கு எண்.255/2019 என எண்ணிடப்பட்டு, வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.செந்தில்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.முத்தையா அவர்கள் முன்னிலையாகியும், 9 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எ.எல்.விஜயதேவராஜ் அவர்கள் முன்னிலையாகியும், 7 ம் பிரதிவாதி தரப்பில் அழைத்தும் ஆஜராகாததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், வழக்குரை, எதிர்வழக்குரை, இருதரப்பு வாதம் ஆகியவற்றை ஓர்வு செய்தும்

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.22 17:48:31 +0530

இந்நாள்வரை நிலுவையிலிருந்து வந்த இந்த வழக்கில் இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்...

## தீர்ப்புரை

1. தாவாச் சொத்துக்களில் வாதிக்குரிய சரிபாதி 1/2 பங்கு பாகத்தினை 1,2 பிரதிவாதிகளிடமிருந்து நயமிடர் பார்த்து பிரித்து பெறத்தக்கதாய் முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க கோரியும், வழக்கின் செலவுத் தொகை மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல்.

**2. திருத்தப்பட்ட வழக்குரையின் சுருக்கம்:-**

2(1). தாவாச் சொத்துக்கள் தெற்கு மாம்பட்டி, வடக்கு மாம்பட்டி மற்றும் தேவஸ்தானம் மாம்பட்டி ஆகிய கிராமங்களில் உள்ளன. தாவா சொத்துக்கள் ஆதியில் வாதியின் தந்தை லேட்.க.காவேரி என்ற பெரியணனுக்கும், அவரது தம்பியான லேட்.க.ராமையா என்பவருக்கும் பூர்வீக பாத்தியமான சொத்துக்களாகும். வாதியின் தந்தை காவேரி என்ற பெரியணனும் அவரது தம்பி ராமையாவும் பூர்வீக சொத்துக்கள் தவிர வேறு சில சொத்துக்களை இருவரும் சேர்ந்தும், தனித்தனியாகவும் கிரையம் பெற்று அனுபவித்து வந்துள்ளனர். மேற்படியார்கள் இருவரும் சேர்ந்து கிரையம் வாங்கிய சொத்துக்களை பிரித்து கொண்டும், தனித்தனியே வாங்கி சொத்துக்களை அவரவர் தனித்தும் அனுபவித்து வந்துள்ளார்.

2(2). 1வது இலக்க சொத்தில் மேற்கு பக்கம் சரிபாதி பாகத்தை வாதியின் தந்தையும் கிழக்கு பக்கம் சரிபாதி பாகத்தை அவரின் தம்பி ராமையாவும் அனுபவித்தும் அதிலிருக்கும் கிணற்றை பொதுவாக வைத்து தண்ணீர் எடுத்து நீர்பாசனம் செய்தும், 2வது இலக்க சொத்தில் மேற்கு பக்கம் சரிபாதி பாகத்தை வாதியின் தந்தை காவேரி என்ற பெரியணன் அவரது தந்தை ராமையாவும் அனுபவித்தும், 3வது இலக்கச் சொத்தில் கிழக்கு பக்கம் சரிபாதி பாகத்தை வாதியின் தந்தையும், மேற்கு பக்கம் சரிபாதி பாகத்தை அவரின் தம்பி ராமையாவும் அனுபவித்து வந்தனர். 4வது இலக்கச் சொத்தில் இருந்த ஓட்டு

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.04.22 17:48:39 +0530

வீட்டில் வாதியின் தந்தையும், அவரது தம்பி ராமையாவும் ஆளுக்கொரு பகுதியில் குடியிருந்து வரும்படி வாய்மொழி குடும்ப ஏற்பாட்டினை செய்து கொண்டதில் கிழக்கு பகுதியில் வாதியின் தந்தை காவேரி என்ற பெரியணன் தன் குடும்பத்துடன் வசித்தும், மேற்கு பகுதியில் வாதியின் தந்தையின் தம்பி ராமையா தன் குடும்பத்துடன் வசித்தும் வந்தனர். பின்னர் அந்த வீடு இடித்து விட்டபடியால் அவரவர் குடியிருந்த பகுதிகளில் அவரவர் செலவில் தனித்தனியே கூரை வீடுகள் கட்டி குடியிருந்து வந்தனர்.

2(3). வாதியின் தந்தை தொழில் நிமித்தமாக தும்பைபட்டியில் தன்னுடைய இடத்தில் வீடு கட்டி குடியிருந்து டீ கடை நடத்தி வாழ்ந்து வந்த போது 1997ம் ஆண்டு இறந்து விட்டார். அவரது தம்பி ராமையா பல ஆண்டுகளுக்கு முன்பு இறந்து விட்டார். வாதியின் தந்தை இறந்ததற்கு பின்னீடு முன்பு ஏற்பட்ட குடும்ப ஏற்பாட்டின் படி பிரிவினையாகாமல் அனுபவம் செய்து வந்ததில், தாவா 4வது இலக்கச் சொத்தில் கிழக்கு பக்கம் தன் தந்தையரால் கட்டப்பட்ட கூரை வீட்டில் குடியிருந்து அனுபவித்து வந்ததில் மேற்படி வீட்டிற்கு வாதியின் பெயருக்கு ஊராட்சி மன்றத்தில் வரி விதிப்பு ஏற்பட்டு வரியை தன் பெயரில் செலுத்தி வந்துள்ளார்.

2(4). வாதி வேலை நிமித்தமாக வெளிநாடு சென்றதாலும், வாதயின் தாயார் மற்றும் சகோதரிகள் அருகில் தும்பைபட்டியலிருந்த வீட்டில் குடியிருக்க நேர்ந்ததாலும், 4வது இலக்க சொத்திலிருந்த கூரை வீடு இடிந்த நிலையில் இருந்ததால் அதனை இடித்து விட்டு வீடு இருந்த பகுதியில் விறகு முதலிய பொருட்களை சேகரித்து வைத்து காலியிடத்தை வாதி தனது தனித்த அனுபவத்தில் வைத்து அனுபவித்து வந்துள்ளார். 4வது இலக்க சொத்தில் மேற்கு பக்கம் உள்ள வீட்டில் 1,2 பிரதிவாதிகள் குடியிருந்து வருகிறார்கள்.

2(5). தாவா 5, 6வது இலக்கச் சொத்துக்கள் பூர்வீக சொத்துக்களாகும். மேற்படி சொத்துக்கள் வாதியின் தகப்பனார் காவேரி (எ) பெரியணன் மற்றும் 1,2 பிரதிவாதிகளின் தகப்பனார் ராமையா பெயரில் கூட்டுபட்டா எண்:390

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.22 17:48:46 +0530

ஏற்பட்டுள்ளது. தாவா 7 வது இலக்கச் சொத்தான சர்வே எண்:121/8 பி–க்கு உட்பிரிவுக்கு முந்தைய சர்வே எண்:121/8 க்கான எஸ்.எல்.ஆர் வாதியின் தகப்பனார் பெரியணன் பெயரில் ஏற்பட்டுள்ளது. பிராது சொத்துக்கள் அனைத்தும் வாதி மற்றும் 1,2 பிரதிவாதிகளின் கூட்டு அனுபவத்தில் உள்ள பூர்வீக சொத்துக்களாகும்.

2(6). வாதியின் தந்தை காவேரி என்ற பெரியணன் உயிரோடு இருந்த காலத்தில் தன் மனைவியும், வாதியின் தாயாருமான 7 ம் பிரதிவாதிக்கும் மகள்களான 8 முதல் 11 பிரதிவாதிகளுக்கும் சொத்துக்களை தனித்தனியாக கொடுத்து விட்டார். பூர்வீக சொத்து உள்ளிட்ட எஞ்சிய சொத்துக்களில் 7 முதல் 11 பிரதிவாதிகளுக்கு யாதொரு பாக பாத்தியமும் கிடையாது. வாதி அயல்நாட்டில் இருப்பதால் 1,2 பிரதிவாதிகள், 7 முதல் 11 பிரதிவாதிகளை கூட்டாக சேர்ந்து கொண்டு வாதிக்கு தாவா சொத்துக்களில் யாதொரு பாக பாத்தியமும் இல்லாதது போலவும், இறந்து போன காவேரி என்ற பெரியணனுக்கு வாதி ஒரே மகன் என்பதை மறைத்து அபகரிக்கும் நோக்கத்தோடு மோசடியாக ஆவணங்கள் உற்பத்தி செய்திருப்பது 2017 ஆகஸ்ட் மாதம் தெரிய வந்துள்ளது.

2(7). தாவா சொத்துக்களில் வாதிக்குரிய பாகத்தினை அவரது தந்தை காலத்தில் ஏற்பட்ட தற்காலிக குடும்ப ஏற்பாட்டின் படி அனுபவித்து வந்த போதிலும் சட்டப்படியான பாகபிரிவினை எதுவும் இதுவரை மேற்கொள்ளவில்லை. 1,2 பிரதிவாதிகள் தாவா சொத்துக்களின் ஸ்திதியை மாற்றம் செய்யவும், வாதியின் பாகத்தை பந்தக பாராதீனங்கள் செய்யவும் முயற்சி செய்து வருவதால் தாவா சொத்துக்களில் வாதிக்குரிய பாகத்தினை 1,2 பிரதிவாதிகளிடமிருந்து பிரித்து தரக் கோரி வாதியால் இவ்வழக்கு தாக்கல்.

**3. <u>1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு எதிர் வழக்குரையின் சுருக்கம்</u>:–**

3(1). 1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் இதில் வியக்தமாய் ஒப்புக் கொள்ளும் சங்கதிகளை தவிர ஏனையவற்றை மறுக்கப்படுகின்றன. வாதியின் தகப்பனார் காவேரி பெரியணன் என்பவரும், பிரதிவாதிகளின் தகப்பனார்

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.22 17:48:53 +0530

ராமையா என்பவரும் சுமார் 48 வருடங்களுக்கு முன்பாகவே தங்களுக்கு பாத்தியமான பூர்வீக சொத்துக்களை பிரித்து கொண்டு விட்டார்கள். தாவா 1வது இலக்க சொத்து வாதியின் தகப்பனார் காவேரி பெரியணனும் அவரது சகோதரரும் பிரதிவாதிகளின் தகப்பனாருமான ராமையா பிரித்து கொண்டு சரிபாதி பாகத்தை வாதியின் தந்தையும், கிழக்கு பக்கம் சரிபாதி பாகத்தை அவரின் சகோதரரும் பிரதிவாதிகளின் தந்தையுமான ராமையாவும் அனுபவித்து வந்தனர். 1வது இலக்க சொத்தின் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 10 செண்ட் ஆகும். வாதியின் தகப்பனார் காவேரி பெரியணன் பெயரில் சர்வே எண்:280/2எ–ல் 50 செண்ட் தனிப்பட்டாவாக உள்ளது. மீதமுள்ள 60 செண்ட் சர்வே எண்:280/2பி–ல் வாதியின் தகப்பனார் காவேரி பெரியணன் பெயரிலும், பிரதிவாதிகளின் தகப்பனார் ராமையா பெயரிலும் கூட்டு பட்டாவாக உள்ளது. மேற்படி 60 செண்ட்–ம் பிரதிவாதிகளின் தகப்பனார் ராமையாவின் அனுபவத்தில் இருந்து பின்னர் அவரது இறப்பின் பின் பிரதிவாதிகளின் அனுபவத்தில் உள்ளது.

3(2). தாவா 2வது இலக்க சொத்துக்கள் பிரதிவாதிகளின் தகப்பனார் ராமையா பெயரில் பதிவு செய்யப்பட்ட பத்திரம் மூலம் கிரையம் பெற்று பட்டா மாறுதல் ஏற்பட்டு ராமையா அனுபவத்தில் இருந்து பின்னர் அவரது இறப்பின் பின் பிரதிவாதிகளின் அனுபவத்தில் உள்ளது.

3(3). தாவா 3வது இலக்க சொத்தும் வாதியின் தகப்பனார் காவேரி பெரியணன் என்பவரும் அவரது சகோதரரும் பிரதிவாதிகளின் தகப்பனாருமான ராமையா என்பவரும் தங்களுக்குள் சரிபாதியாக பிரித்துக் கொண்டு அனுபவித்து வந்தார்கள். தாவா 4வது இலக்க சொத்து வாதியின் தகப்பனார் காவேரி பெரியணனுக்கும் அவரது சகோதரரும் பிரதிவாதிகளின் தகப்பனாருமான ராமையா அவர்களுக்கும் ஏற்பட்ட பாகபிரிவினையில் ராமையா அவர்களுக்கு ஒதுக்கப்பட்டு அவரது இறப்பிற்கு பின்பு மேற்படி 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதி பெயரில் கூட்டுபட்டா ஏற்பட்டு அவர்களது அனுபவத்திலும், பாத்தியத்திலும் நாளது தேதி வரை தாவா 4 வது இலக்கச் சொத்து உள்ளது.

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.22 17:49:00 +0530

3(4). தாவா 4 வது இலக்கச் சொத்தை பொறுத்து 1,2 பிரதிவாதிகள் வாதியின் தாயார் கொப்பாள் மற்றும் அவரது மூத்த சகோதரிகளான மருந்தாயி, ஒய்யம்மாள், ஜெயமாரி, ஜெயலலிதா ஆகியோர்களுக்கு எதிராக திருப்பத்தூர் டி.மு கோர்ட்டில் அசல் வழக்கு எண்:26/98 ன் கீழ் தாவா 4 வது இலக்க சொத்து தங்களுக்கு பாத்தியப்பட்டது என டிக்ளேர் செய்தும், மேற்படி வழக்கின் 1 முதல் 5 பிரதிவாதிகள் தடையும் இடைஞ்சலும் செய்ய கூடாதென 1 முதல் 5 பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துகட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்த வழக்கு 1ம் பிரதிவாதி மற்றும் அசல் வழக்கு எண்:26/98 ல் 6ம் பிரதிவாதியும், 2ம் பிரதிவாதியுமான நல்லகருப்பன், கருணாநிதி ஆகியோர்களுக்கு சாதகமான தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. பின்னர் மேற்படி தீர்ப்பை எதிர்த்து அசல் வழக்கு எண்:26/98 1 முதல் 5 பிரதிவாதிகள் மாண்புமிகு சிவகங்கை சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு வழக்கு எ.எஸ்.எண்:111/2002 ன் கீழ் மேல் முறையீடு செய்தும் மேற்படி வழக்கு உபயதரப்பு விசாரணைக்கு பின்பு மேற்கண்ட மேல்முறையீடு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. பின்பு மேற்படி மேல்முறையீட்டு வழக்கு எண்: 111/2002 ன் மேல்முறையீட்டுதாரர்கள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் மேல்முறையீட்டு வழக்கு தாக்கல் செய்தும் அதில் எம்.பி.எண்1/2011 ன் S.A(MD)SR.No:5790/2005 ல் மேற்படி மேல்முறையீட்டு வழக்கை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 1520 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து ஏற்று கொள்ள வேண்டும் என மனுதாக்கல் செய்யப்பட்டு அதில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை மனுவை அனுமதிக்க செலவு தொகையாக ரூ.250/- மட்டும் மதுரை ஸ்டேட் லீகல் சர்வீசஸ் அதாரிட்டிக்கு செலுத்த வேண்டும் என உத்தரவிடப்பட்டது. மேல்முறையீட்டு மனுதார்கள் மேற்படி செலவு தொகை செலுத்தாததால் மேற்படி அப்பீல் மனு தள்ளுபடி செய்யப்பட்டது. வாதியின் வழக்கில் எவ்வித வியாஜ்ஜிய மூலமும் கிடையாது. 1 முதல் 4 வரையான சொத்துக்களுக்கு வாதிக்கு எவ்வித சம்பந்தமும் கிடையாது. எனவே

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.22 17:49:06 +0530

வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்று கூறப்பட்டுள்ளது.

**4. <u>8 முதல் 11ம் பிரதிவாதிகள் தரப்பு எதிர் வழக்குரையின் சுருக்கம்</u>:–**

4(1). 9 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பில் 8ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையை ஏற்று கொள்வதாக மேலொப்பம் செய்யப்பட்டுள்ளது. 8 முதல் 11ம் பிரதிவாதி தரப்பில் இதில் வியக்தமாய் ஒப்புக் கொள்ளும் சங்கதிகளை தவிர ஏனையவற்றை மறுக்கப்படுகின்றன. வாதி மற்றும் 8 முதல் 11 பிரதிவாதிகளின் தகப்பனாரும் 7ம் பிரதிவாதியின் கணவருமான லேட்.காவேரி என்ற பெரியணன் மற்றும் அவரது உடன்பிறந்த தம்பியும் 1 முதல் 6 பிரதிவாதிகளின் தகப்பனாருமான ராமையாவுக்கும் பூர்வீக பாத்தியமான சொத்துக்களாகும். மேற்படி சொத்துக்களை மேற்படி காவேரி என்ற பெரியணனும், ராமையாவும் தங்களுக்குள் குடும்ப ஏற்பாடு செய்து கொண்டு சரிபாதி பாகங்களை தற்காலிகமாக பிரித்து கொண்டு அனுபவம் செய்து வந்தனர். பிராது 4வது இலக்க சொத்தில் ஓட்டு வீடும், கூரை வீடும் இருந்ததில் பிரதிவாதியின் தந்தை காவேரி என்ற பெரியணன் கிழக்கு பகுதியிலும், 1 முதல் 6 பிரதிவாதிகளின் தந்தை ராமையா மேற்கு பகுதியிலும் குடும்பத்துடன் வசித்து வந்தனர். பின்னர் அந்த வீடுகள் இடிந்து விட்டபடியால் அவரவர் குடியிருந்த பகுதிகளில் அவரவர் செலவில் தனித்தனியே கூரை வீடுகள் கட்டி குடியிருந்து வந்தனர். அதேபோன்று 1 முதுல் 3 இலக்க சொத்துக்களை சரிபாதி பாகங்களை தனித்தனியே தற்காலிகமாக அனுபவம் செய்து வந்தனர். அவரவர் அனுபவித்து வந்த பகுதியினை அவரவர் வாரிசுகள் நிரந்தர பாகபிரிவினை எதுவும் செய்து கொள்ளாமல் நாளது தேதி வரை அனுபவம் செய்து வருகின்றனர்.

4(2). 1ம் பிரதிவாதி தாவா வழக்கின் 4வது இலக்க சொத்தையும் மற்றொரு சொத்தையும் பொறுத்து 7 முதல் 11 பிரதிவாதிகள் மீது திருப்பத்தூர் டி.மு. கோர்ட்டில் மு.வ.எண்:26/98 என்று வழக்கு தாக்கல் செய்து டிக்ளரேஷன் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரினார். அந்த வழக்கில் வாதியான 1ம் பிரதிவாதி தன் அண்ணனான 2ம் பிரதிவாதியை 6ம்

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.22 17:49:13 +0530

பிரதிவாதியாக சேர்த்து அவருக்கு பாக பாத்தியம் கோரி வழக்கு தாக்கல் செய்திருந்தார். மேற்படி சொத்துக்களில் பாகமுடைய இந்த வழக்கின் வாதியும் பிரதிவாதியின் தம்பியுமான ஜெகஜோதி பெரியகருப்பனை சேர்க்காமல் விட்டு விட்டார். அச்சமயத்தில் ஜெகஜோதி பெரியகருப்பன் வெளிநாட்டில் இருந்தார். அந்த வழக்கு விவரம் அவருக்கு தெரியாது 8ம் பிரதிவாதிக்கும், அவரது சகோதரிகளுக்கும், தாயாருக்கும் விவரம் தெரியாததால் அவரை வழக்கில் சேர்க்க வேண்டுமென்ற விவரம் தெரியாமல் இருந்து விட்டனர். அதனால 1,2 பிரதிவாதிகள் அந்த வழக்கில் தங்களுக்கு சாதகமாக உண்மைகளை மறைத்து தீர்ப்பு பெற்று விட்டனர். அதன்படி மேல்முறையீட்டிலும் அவ்வாறே தீாப்பு பெற்றனர். பின்னர் பிரதிவாதி வகையறா உரிய முறையில் மேற்கொண்டு வழக்கை நடத்த இயலாமல் போய்விட்டது. 1,2 பிரதிவாதிகள் தங்களுக்கு சாதகமான தீர்ப்பு பெற காரணமாக இருந்து விட்டனர் என்பதை தவிர 8ம் பிரதிவாதியின் தம்பியும் வழக்கின் வாதியுமான ஜெகஜோதி பெரிய கருப்பனுக்கு உரிய பாகத்தினை மோசம் செய்ய வேண்டுமென்ற எண்ணம் 8ம் பிரதிவாதிக்கோ அவரது சகோதரிகளுக்கோ எக்காலத்திலும் இருந்ததில்லை. பிராது சொத்துக்களில் வாதிக்குரிய பாகம் கிடைக்கத்தக்கது என்பதில் 8ம் பிரதிவாதிக்கோ மற்ற பிரதிவாதிகளுக்கோ யாதொரு ஆட்சேபனையும் கிடையாது. எனவே 8ம் பிரதிவாதி பாக உரிமையினை பிராது சொத்துக்களை பொறுத்து ஊர்ஜிதம் செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்ற கூறப்பட்டுள்ளது.

**<u>5. 7ம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரையின் சுருக்கம்:</u>**

7ம் பிரதிவாதி தரப்பில், 7ம் பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்பு செய்யப்பட்டு அழைத்தும் ஆஜராகாததால் 22.11.2017ம் தேதி ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்.

**<u>6. 1ம் பிரதிவாதி தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரையின் சுருக்கம்:</u>**

6(1). 1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் தாவா வழக்கு திருப்பத்தூர் டி.மு

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.22 17:49:21 +0530

கோர்ட்டில் அசல் வழக்கு எண்:118/2017 ன் கீழ் வாதியால் தாக்கல் செய்யப்பட்டது. பின்பு அதிகார வரம்பின் கீழ் மாண்புமிகு சமூக நீதிமன்றத்திற்கு 2019 ம் வருடம் மாற்றலாகி நாளது தேதி வரையில் நிலுவையில் இருந்து வருகிறது. சமூகம் நீதிமன்றத்தில் வாதி வழக்கு தாக்கல் செய்யும் போது வழக்கில் கூறப்பட்டுள்ள விஷயங்கள் அனைத்தையும் நன்கு படித்து பார்த்து விட்டு சரி என ஒப்புக் கொண்டு தான் மேற்படி வாதி பிராதிலும் மற்ற மனுக்களிலும் கையெழுத்திட்டுள்ளார்.

6(2). தாவா வழக்கை தாக்கல் செய்து 7 வருடங்கள் கழித்து பிராது முழுவதையும் திருத்த கோரும் மனு தாக்கல் செய்துள்ளது ஏற்றுக் கொள்ள கூடியதல்ல. மேலும் வாதி தரப்பில் ஏற்கனவே இரண்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. மேற்கண்ட மனுக்களை தயார் செய்வதற்கு வாதியின் பிராது நகலை படித்து பார்த்து விட்டு தான் தயார் செய்திருப்பார்கள். பிராது நகலில் படித்து பார்க்கும் போதெல்லாம் மேற்கண்ட தவறுகள் விடுபட்டு போன விஷயங்கள் வாதிக்கு புலப்படவில்லை. தற்போது எந்த பிராது நகலை பார்த்து வாதி தேவையற்ற மனுவை தாக்கல் செய்துள்ளார் என்பது தெரிய வில்லை. மேலும் பட்டா நம்பர் 1057 சர்வே எண்:280/2 பி-ல் உள்ள 1 ஏக்கர் 10 செண்டில் வாதி தகப்பனார் காவேரி பெரியண்ணனுக்கும் தனது தகப்பனார் ராமையா அவர்களுக்கும் ஏற்பட்ட பாக பிரிவினையில் மேற்படி காவேரி பெரியண்ணனுக்கு 50 செண்ட் கொடுக்கப்பட்டு விட்டது. வாதியின் தந்தை காவேரி பெரியண்ணன் உயிருடன் இருந்த காலத்தில் தன் மனைவியும் வாதியின் தாயாருமான 7ம் பிரதிவாதிக்கும் தனது மகள்களான 8 முதல் 11 பிரதிவாதிகளுக்கும் சொத்துக்களை தனித்தனியாக பிரித்து கொடுத்து விட்டார் என்பதை ஒப்புக் கொண்டு விட்டார். வாதியின் தந்தை தனக்கு பாக பிரிவினையில் கிடைத்த சொத்துக்களை தனது மனைவி 7ம் பிரதிவாதிக்கும் மகள்களான 8 முதல் 11 பிரதிவாதிகளுக்கும் சொத்துக்களை தனித்தனியாக கொடுத்து விட்டார் என்று பிராதில் கூறிவிட்டு பாகபிரிவினை நடக்கவில்லை

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.22 17:49:30 +0530

என்று கூறியிருப்பது தவறாகும், வாதியின் தகப்பனார் காவேரி பெரியண்ணன் என்பவரும் பிரதிவாதிகளின் தகப்பனார் ராமையா என்பவரும் சுமார் 48 வருடங்களுக்கு முன்பாகவே தங்களுக்கு பாத்தியமான பூர்வீக சொத்துக்களை பிரித்து கொண்டு விட்டார்கள்.

6(3). வாதி தாக்கல் செய்துள்ள சொத்து விவரத்தில் 1 முதல் 3 சொத்துக்கள் எற்கனவே பாகபிரிவினை செய்யப்பட்டு விட்டது என்றும் 4 வது இலக்க சொத்துக்களை பொறுத்து இவ்வழக்கில் தானும், தனது சகோதரனும் வாதியின் தாயார் கொப்பாள் மற்றும் அவரது மூத்த சகோதரியான மருந்தாயி, ஒய்யம்மாள், ஜெமாரி, ஜெயலலிதா ஆகியோர்களுக்கு எதிராக திருப்பத்தூர் டி.மு.கோர்ட்டில் அசல் வழக்கு எண்:26/1998 ன் கீழ் தங்களுக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்தும், மேற்படி வழக்கில் 1 முதல் 5 பிரதிவாதிகள் தடையும் இடைஞ்சலும் செய்ய கூடாது என உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதனை எதிர்த்து மாண்புமிகு சிவகங்கை சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு வழக்கு எ.எஸ்.எண்:111/2002 என தாக்கல் செய்ததில் மேற்படி வழக்கு உபயதரப்பு விசாரணைக்கு பிறகு தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்கண்ட மேல்முறையீட்டு வழக்கு எண்:11/2002 மேல்முறையீட்டுதாரர்கள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மேல்முறையீட்டு வழக்கு தாக்கல் செய்து அதில் எம்.பி.எண்:1/2011 ன் SA(MD)S.R.No:5790/2005 ல் மேற்படி மேல்முறையீட்டு வழக்கை தாக்கல் செய்திருப்பதில் ஏற்பட்ட 1520 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து ஏற்று கொள்ள வேண்டும் என மனு தாக்கல் செய்யப்பட்டு அதில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை மனுவை அனுமதிக்க செலவுத் தொகை ரூ.250/- மட்டும் மதுரை ஸ்டேட் லீகல் சர்வீஸஸ் அதாரிட்டிக்கு செலுத்த வேண்டும் என உத்தரவிடப்பட்டது. மேற்படி செலவுத் தொகை செலுத்தாததால் தள்ளுபடி செய்யப்பட்டது.

6(4). மனுதாரர் தனது மனுவின் பிராதில் சொத்து விவரத்தில்

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.04.22 17:49:36 +0530

குறிப்பிடப்படாத சர்வே எண்கள்:138/3A, 2 ஏக்கர் 69 செண்ட் சர்வே எண்:138/3C–ல் 1 ஏக்கர் 21 செண்ட், சர்வே எண்:121/8B–ல் 49 ஹெக்டேர் ஆகிய சொத்துக்களை பொறுத்து ஏற்கனவே வாதியின் தகப்பனாருக்கும், பிரதிவாதிகளின் தகப்பனாருக்கும் பாகபிரிவினை ஏற்பட்டு ஆளுக்கு சரிபாதி சொத்துக்கள் தற்போது வரை பிரதிவாதிகள் அனுபவத்தில் இருந்து வருகிறது.

6(5). சர்வே எண்:138/3A–ல் 2 ஏக்கர் 69 செண்டையும் சர்வே எண்:138/3C–ல் 1 ஏக்கர் 21 செண்ட் ஆகிய இரண்டு சொத்துக்களும் 1ம் பிரதிவாதியின் சகோதரி நீலாவதி மற்றும் சகோதரர் கருணாநிதி மற்றும் ராகினி, மருந்தாயி, நவமணி ஆகிய அனைவரும் சேர்ந்து கடந்த 01.11.2023ம் தேதி மேற்கண்ட 2 இலக்க சொத்துக்களையும் 1ம் பிரதிவாதிக்கு பதிவு செய்யப்பட்ட பாத்திய விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்து அதன் பேரில் 1ம் பிரதிவாதியின் அனுபவத்திலும், பாத்தியத்திலும் இருந்து வருகிறது.

6(6). சர்வே எண்:224/11ல் 6 செண்ட் அளவுள்ள நஞ்சை நிலத்தை 1ம் பிரதிவாதி பாகம் நீக்கி மேற்கண்ட 1ம் பிரதிவாதி சகோதரி நீலாவதி, சகோதரன் கருணாநிதி, சகோதரி ராகினி, மருந்தாயி, நவமணி ஆகிய 5 பேரும் 1ம் பிரதிவாதி பாகம் நீக்கி மற்ற 5 நபர்களும் அவர்களுக்குரிய பாகத்தை 1ம் பிரதிவாதிக்கு பதிவு செய்யப்பட்ட பாத்திய விடுதலை பத்திரம் கடந்த 01.11.2023ம் தேதி எழுதி கொடுத்துள்ளார்கள். சர்வே எண்:224/11 நாளது தேதி வரை 1ம் பிரதிவாதி அனுபவத்திலும், பாத்தியத்திலும் இருந்து வருகிறது. எனவே வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

**7. 8ம் பிரதிவாதி தரப்பு கூடுதல் எதிர்வழக்குரையின் சுருக்கம்**:

7(1). 8ம்பிரதிவாதி தரப்பில், இறந்து போய்விட்ட ராமையாவின் பாகத்தில் அவரது மகள்களான 3 முதல் 6 பிரதிவாதிகளுக்கும் சரிபங்கு உண்டு. ஆனால் ஏற்கனவே 1ம் பிரதிவாதி திருப்பத்தூர் டி.மு.கோர்ட்டில் தாக்கல் செய்திருந்த அசல் வழக்கு எண்:26/98 வழக்கில் 3 முதல் 6 பிரதிவாதிகளின் பாகத்தினை மறைத்து வழக்கு தாக்கல் செய்து மோசடியான தீர்ப்பாணையை பெற்றுள்ளார். 3

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.04.22 17:49:44 +0530

முதல் 6 பிரதிவாதிகளுக்கு சட்டப்படியான சரிபங்கு உள்ளதை வழக்கில் தீர்மானம் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது. வாதி தாக்கல் செய்துள்ள பிராதிலும் இறந்து போன காவேரி என்ற பெரியணன் பாகத்திலும் அவருடைய மகள்களான 8 முதல் 11 பிரதிவாதிகளுக்கும் சட்டப்படி சரிபங்கு உண்டு என்ற விவரம் வேண்டுமென்றே மறைக்கப்பட்டுள்ளது. 8 முதல் 11 பிரதிவாதிகளின் பங்கை பொறுத்து வழக்கில் தீர்மானம் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது. இறந்து போன ராமையாவின் பாகத்தில் 3 முதல் 6 பிரதிவாதிகளின் பாகம் பற்றியும், இறந்து போன காவேரி என்ற பெரியணன் பாகத்தில் 8 முதல் 11 பிரதிவாதிகளின் பாகம் பற்றியும் தகுந்த எழுவினாக்களை வனைந்து வழக்கை மேல்நடத்த வேண்டும் என்றும் 3 முதல் 6 மற்றும் 8 முதல் 11 பிரதிவாதிகளுக்கு உரிய பாகத்தினை தீர்மானம் செய்து முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

8. <u>வழக்கெழு வினாக்கள்</u>:-

1. தாவா சொத்துக்களில் வாதிக்கு 1/2 பங்கு பாத்தியம் உள்ளதா?
2. வாதி கோரியுள்ளவாறு முதல்நிலை தீர்ப்பாணை கிடைக்கத்தக்கதா?
3. வாதிக்கு கிடைக்கக் கூடிய இதர பரிகாரக்ஙள் என்ன?

9. <u>சான்றுகள்</u>:-

வாதி தரப்பில் வாதி ஜெகஜோதிபெரியகருப்பன் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டிருக்கின்றன. வாதி தரப்பில் மோகன்தாஸ் என்பவர் வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டு, சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. பிரதிவாதிகள் தரப்பில் ராஜாராம் என்பவர் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் சுகதேவன் என்பவர் பி.வா.சா. 2 ஆக விசாரணை செய்யப்பட்டு, சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.22 17:49:51 +0530

10. <u>வழக்கெழு வினா 1 மற்றும் 2 ன் தீர்முடிவு</u>:–

1. தாவா சொத்துக்களில் வாதிக்கு 1/2 பங்கு பாத்தியம் உள்ளதா?

2. வாதி கோரியுள்ளவாறு முதல்நிலை தீர்ப்பாணை கிடைக்கத்தக்கதா?

10(1) சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், மாம்பட்டி கிராமத்தில் (1) சர்வே எண்:280/2B புன்செய் தரம் நஞ்சை விஸ்தீரணம் 60 செண்ட் ரூ.21,000/- (2)சர்வே எண்:224/11 புன்செய் விஸ்தீரணம் சுமார் 7 செண்ட் ரூ.2,400.00 மதிப்பு (3)சர்வே எண்:139/1 புன்செய் விஸ்தீரணம் சுமார் 2.80 ஏக்கர் ரூ.56,000/- மதிப்பு (4) சிங்கம்புணரி வட்டம், மாம்பட்டி தெற்கு கிராமத்தில் நத்தம் சர்வே எண்:191/4, கிழமேல் வீதிக்கும் வடக்கு, கைலாசம் வீட்டுக்கும் சௌந்தரபாண்டியன் மாட்டு கூடத்திற்கும் கிழக்கு, சேதுபதி வீட்டுக்கும் மேற்கு, சௌந்தரபாண்டியன் சேது நாச்சம்மாள் காலியிடத்திற்கும் தெற்கு, இதற்குள்ளான காலிமனையிடம் சுமார் 5 செண்ட் ரூ.50,000/- (5) சர்வே எண்:138/3A விஸ்தீரணம் 1.9 ஹெக்டேருக்கு 2 ஏக்கர் 69 செண்ட் ரூ.37,660/- மதிப்பு (6) சர்வே எண்:138/3 C விஸ்தீரணம் 49 ஹெக்டேருக்கு 1 ஏக்கர் 21 செண்ட் ரூ.16,940/- மதிப்பு (7) சர்வே எண்:121/8 B விஸ்தீரணம் 49 ஹெக்டேருக்கு 1 ஏக்கர் 21 செண்ட் மதிப்பு ரூ.12,100/- மொத்த மதிப்பு ரூ.1,96,100 இதில் வாதியின் 1/2 பங்கு மதிப்பு ரூ.98,050/- என்பது வழக்கு சொத்தாகும்.

10(2). வாதி தரப்பில் தாவா சொத்துக்கள் ஆதியில் வாதியின் தந்தை காவேரி என்ற பெரியணண்னனுக்கும் அவரது தம்பியான ராமையா என்பவருக்கும் பூர்வீக பாத்தியமான சொத்துக்கள் என்றும் மேற்படி இருவரும் பொதுவில் வைத்து தாவா சொத்துக்களை அனுபவித்து வந்து, பின்னர் தங்களுக்குள் ஏற்பட்ட குடும்ப ஏற்பாட்டின் படி சரிபாதி பாகங்களை தற்காலிகமாக பிரித்து அவர்களது காலம் வரை அனுபவித்து வந்தார்கள் என்றும் அவர்களுக்குள் சட்டமுறையாக எவ்வித பாக பிரிவினையும் ஏற்படவில்லை என்றும் ராமையாவின் வாரிசுகளான பிரதிவாதிகள் வாதியின் பாகத்திற்கு விரோதமாக செயல்பட்டு வருவதால் பாகபிரிவினை கோரி இவ்வழக்கு தாக்கல்

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.22 17:49:58 +0530

செய்யப்பட்டதாக வாதம் முன்வைக்கப்பட்டது.

10(3). 1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் தாவா 2வது இலக்க சொத்து தங்களது தகப்பனாரான ராமையாவின் கிரைய சொத்து என்றும் 1,3,4 முதல் 7 இலக்கச் சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்று பெரியணன் மற்றும் ராமையா ஆகியோர்களுக்கிடையே ஏற்பட்ட பாக பிரிவினையில் மேற்படி சொத்துக்கள் ராமையா பாகத்திற்கு ஒதுக்கப்பட்டு 1,2 பிரதிவாதிகளுக்கு இறங்குரிமை படி கிடைத்து அனுபவித்து வருவதாகவும், தாவா சொத்துக்கள் ஏற்கனவே பாகம் பிரிக்கப்பட்டது என்பதால் வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்தக்கதல்ல என்றும் வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்று வாதம் முன்வைக்கப்பட்டது.

10(4). 8 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பில், தாவா சொத்துக்கள் பாகம் பிரிக்கப்படவில்லை என்றும் பாகம் கோர வாதிக்கும், 8 முதல் 11 பிரதிவாதிகளுக்கும் உரிமை உள்ளது என்று கூறுகின்றனர்.

10(5). வாதி தாவா சொத்துக்களில் தனக்கு ½ பாகம் சித்தித்துள்ளது என்ற தனது வழக்கை நிரூபணம் செய்வதற்கு தனது தரப்பு வழக்கை வலியுறுத்தி வா.சா.1 ஆக சாட்சியம் அளித்து வா.சா.ஆ–1 முதல் வா.சா.ஆ.9 வரையான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார். வா.சா.ஆ.1 ஆவணமானது 29.08.2017ம் தேதியிட்ட பட்டாவாகும். வா.சா.ஆ–1 ஆவணத்தை பரிசீலிக்கையில் சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், மாம்பட்டி வடக்கு கிராமம் சர்வே எண்:280/2Bல் 0.24.00 ஹெக்டேர் கரந்தப்பன் மக்கள் ராமையா, காவேரி ஆகியோர்கள் பெயரில் 1057 பட்டா வழங்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

10(6). வா.சா.ஆ–2 ஆவணத்தை பரிசீலிக்கையில் சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், மாம்பட்டி வடக்கு கிராமம் சர்வே எண்:224/11ல் 0.2.50 ஹெக்டேர் நன்செய் நிலம் கரந்தப்பன் மகன் ராமையா பெயரில் 755 பட்டா வழங்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.22 17:50:06 +0530

10(7). வா.சா.ஆ–3 ஆவணத்தை பரிசீலிக்கையில் சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், மாம்பட்டி தேவஸ்தானம் கிராமம் சர்வே எண்:139/1ல் 1.14.00 ஹெக்டேர் கரந்தப்பன் மக்கள் பெரியணன், இராமையா ஆகியோர்கள் பெயரில் 390 பட்டா வழங்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

10(8). வா.சா.ஆ–4 ஆவணத்தை பரிசீலிக்கையில் கதவு எண்:3/62 ற்குரிய 98–99ம் ஆண்டிற்குரிய வீட்டு வரி ரசீதாகும். வா.சா.ஆ–5 ஆவணத்தை பரிசீலிக்கையில் கதவு எண்:1/922க்கு 2003–2004, 2007–2008ம் ஆண்டிற்குரிய வீட்டு வரி ரசீதாகும். வா.சா.ஆ.6 ஆவணத்தை பரிசீலிக்கையில் கதவு எண்:1/511க்கு 2009–2010ம் ஆண்டிற்குரிய வீட்டு வரி ரசீதாகும். வா.சா.ஆ–7 ஆவணத்தை பரிசீலிக்கையில் கரந்தப்பன் என்பவரின் வம்சாவழி ஜாபிதாவாகும். வா.சா.ஆ.8 ஆவணத்தை பரிசீலிக்கையில் சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், மாம்பட்டி தேவஸ்தானம் கிராமம் சர்வே எண்121/8 ஆனது பட்டா எண்88ல் கரந்தப்பன் மகன் பெரியணன் பெயரில் எஸ்.எல்.ஆர் பதிவுகள் ஏற்பட்டுள்ளது தெரிய வருகிறது.

10(9). வா.சா.ஆ–9 ஆவணமானது 01.11.2023ம் தேதி சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், எஸ்.மாம்பட்டி கிராமம், கதவு எண்:509 என்ற முகவரியில் வசித்து வரும் ராமையா மகன் ராஜாராம் என்பவருக்கு சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், எஸ்.மாம்பட்டி கிராமம், கதவிலக்கம் 509 என்ற முகவரியில் வசித்து வரும் ராமையா மகள் நீலாவதி (1), சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், எஸ்.மாம்பட்டி கிராமம், கதவிலக்கம் 10ஏ/176 என்ற முகவரியில் வசித்து வரும் ராமையா குமாரர் கருணாநிதி (2), சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், எஸ்.மாம்பட்டி கிராமம், கதவு எண்:2/3 என்ற முகவரியில் வசித்து வரும் ராமையா மகள் மூர்த்தி அவர்களின் மனைவியுமான ராகினி (3), சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், எஸ்.மாம்பட்டி கிராமம், கதவு எண்: 46 என்ற முகவரியில் வசித்து வரும் ராமையா மகளும் அறிவுசெல்வம் மனைவியுமான மருந்தாயி (4), சிவகங்கை மாவட்டம்,

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.22 17:50:16 +0530

திருப்பத்தூர் வட்டம், ச.ச.கோட்டை எஸ்.மாத்தூர் சூரிய நகர் கதவு எண்:114 என்ற முகவரியில் வசித்து வரும் ராமையா மகளும், ஜெயராமன் மனைவியுமான நவமணி (5) ஆகியோர்கள் சேர்ந்து சிவகங்கை ரிடி, மதகுபட்டி சப்டி, மாம்பட்டி தேவஸ்தானம் கிராமத்தில் (1)சர்வே எண்:138/3ஏ புஞ்சை பரப்பு ஹெக்டேர் 1.9.00 ஏர்ஸ்க்கு 2 ஏக்கர் 69 செண்ட் அளவுள்ள புஞ்சை நிலம் இதில் பொதுவில் பிரிவில்லாத மொத்த பாகம் 2ல் பிரிவினை இல்லாத பெரியணன் பாகம் நீக்கி ராமையா அவர்களின் பிரிவினை இல்லாத 1 பாகமான 1 ஏக்கர் 34.5 செண்டில் மொத்த பாகமான 6 பங்கில் ராஜாராம் ஆகிய தங்களின் 1 பங்கு நீக்கி எங்களின் பிரிவினை இல்லாத 5 பங்கான 1 ஏக்கர் 12,08 செண்ட் மட்டும் பட்டா எண்:390 (1)09.00 ஏர்ஸ்க்கு நான்கு மால்: வடக்கே : கோதண்ட நாச்சியப்பன்–1, செல்லியஊரணி, தெற்கே–வாய்கால் ஓடை மறுகால், கிழக்கே–குணசேகரன், மேற்கே–செல்லியஊரணி, (2) சர்வே எண்:138/3சி புஞ்சை பரப்பு ஹெக்டேர் 0.49.00 ஏர்ஸ்க்கு 1 ஏக்கர் 21 செண்ட் அளவுள்ள புஞ்சை நிலம் இ்தில் பொதுவில் பிரிவில்லாத மொத்த பாகம் 2ல் பிரிவினை இல்லாத பெரியணன் பாகம் 1 நீக்கி, ராமையா அவர்களின் பிரிவினை இல்லாத 1 பாகமான 60.5 செண்டில் மொத்த பாகமான 6 பங்கில் ராஜாராம் ஆகிய தங்களின் 1 பங்கு நீக்கி எங்களின் பிரிவினை இல்லாத 5 பங்கான 50.42 மட்டும் பட்டா எண் 390ல் 0.49.00 ஏர்ஸ்–க்கு நான்கு மால்:– வடக்கே –வாய்கால் ஓடை மறுகால், தெற்கே–பிச்சைவேளார், கிழக்கே–கர்ணன், வாய்கால் ஓடை மறுகால், மேற்கே செல்லியராணி (3)சர்வே எண்:139/1 புஞ்சை பரப்பு ஹெக்டேர் 1.14.00 ஏர்ஸ்–க்கு 2 ஏக்கர் 81.5 செண்ட் அளவுள்ள புஞ்சை நிலம் இதில் பொதுவில் பிரிவில்லாத மொத்த பாகம் 2ல் பிரிவினை இல்லாத பெரியணன் பாகம் 1 நீக்கி ராமையா அவர்களின் பிரிவினை இல்லாத 1 பாகமான 1 ஏக்கர் 40.7 செண்டில், மொத்த பாகமான 6 பங்கில் ராஜாராம் ஆகீய தங்களின் 1 பங்கு நீக்கி எங்களின் பிரிவினை இல்லாத 5 பங்கான 1 ஏக்கர் 17,3 செண்டு, பட்டா எண்:390ல் 1.14.00 ஏர்ஸ்க்கு நான்குமால்: வடக்கே–அருணகிரி, தெற்கே – குணசேகரன்–1,

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.22 17:50:24 +0530

கலைச்செல்வி–2, கிழக்கே–அழகம்மாள், மேற்கே செல்வமணி–1, ராமசந்திரன்–2 ஆகியவற்றை பாகபாத்திய விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளது தெரிய வருகிறது.

10(10). பிரதிவாதிகள் தரப்பில் ராஜாராம் என்பவர் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, தனது தரப்பு வழக்கை வலியுறுத்தி சாட்சியம் அளித்து பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.10 வரையான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார். பி.வா.சா.ஆ.1 ஆவணமானது சிவகங்கை மாவட்டம், காரைக்குடி பதிவு மாவட்டம், திருப்பத்தூர் சார்பதிவகம், என்.மாம்பட்டி குரூப், என்.மாம்பட்டி கிராமம், சர்வே எண்:280/2 ற்கான வில்லங்க சான்றிதழாகும்.

10(11). பி.வா.சா.ஆ–2 ஆவணமானது சிவகங்கை மாவட்டம், காரைக்குடி பதிவு மாவட்டம், திருப்பத்தூர் சார்பதிவகம், என்.மாம்பட்டி குரூப், என்.மாம்பட்டி கிராமம், சர்வே எண்:280/20 ஆனது பட்டா எண்130 ல் கா.காவேரி அம்மாள் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளதற்கான அ பதிவேடாகும்.

10(12). பி.வா.சா.ஆ.3 ஆவணமானது 05.12.1974 தேதியிட்ட கிரைய பத்திரமாகும். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தை பரிசீலிக்கையில் 05.12.1974 ம் தேதி இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், மாம்பட்டியிலிருக்கும் கரந்தான் மகன் ராமையாவுக்கு, மாம்பட்டி சேகரம், தும்பபட்டியிலிருக்கும் தவமணி மகன் மாதவன் தனக்காகவும், தன் மகன் மைனர் பெயரிடாத ஆண்குழந்தைக்காகவும் கார்டியனாகவும் மாதவன் என்பவர் இராமநாதபுரம் மாவட்டம், மதகுபட்டி சப்டி, மாம்பட்டி கிராமம், வடக்கு மாம்பட்டியில், திருமங்கல கண்மாய் பாசன சர்வே எண்:224/11 ஆத்தியடி நாற்றங்கால் செண்டு 6 ம் அதற்குட்பட்ட சகல விதங்களையும் கிரையம் செய்து கொடுத்துள்ளது தெரிய வருகிறது.

10(13). பி.வா.சா.ஆ–4 ஆவணமானது பதிவு செய்யப்பட்ட பாகவிடுதலை பத்திரமாகும். பி.வா.சா.ஆ.4 ஆவணத்தை பரிசீலிக்கையில் 01.11.2023 ம் தேதி சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், எஸ்.மாம்பட்டி கிராமம், கதவு எண்:509 என்ற முகவரியில் வசித்து வரும் ராமையா மகன் ராஜாராம்

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.22 17:50:31 +0530

என்பவருக்கு சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், எஸ்.மாம்பட்டி கிராமம், கதவிலக்கம் 509 என்ற முகவரியில் வசித்து வரும் ராமையா மகள் நீலாவதி (1), சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், எஸ்.மாம்பட்டி கிராமம், கதவிலக்கம் 10ஏ/176 என்ற முகவரியில் வசித்து வரும் ராமையா குமாரர் கருணாநிதி (2), சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், எஸ்.மாம்பட்டி கிராமம், கதவு எண்:2/3 என்ற முகவரியில் வசித்து வரும் ராமையா மகள் மூர்த்தி அவர்களின் மனைவியுமான ராகினி (3), சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், எஸ்.மாம்பட்டி கிராமம், கதவு எண்: 46 என்ற முகவரியில் வசித்து வரும் ராமையா மகளும் அறிவுசெல்வம் மனைவியுமான மருந்தாயி (4), சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், ச.ச.கோட்டை எஸ்.மாத்தூர் சூரிய நகர் கதவு எண்:114 என்ற முகவரியில் வசித்து வரும் ராமையா மகளும், ஜெயராமன் மனைவியுமான நவமணி (5) ஆகியோர்கள் சேர்ந்து சிவகங்கை ரிடி, மதகுபட்டி சப்டி, மாம்பட்டி தேவஸ்தானம் கிராமத்தில் (1)சர்வே எண்:138/3ஏ புஞ்சை பரப்பு ஹெக்டேர் 1.9.00 ஏர்ஸ்க்கு 2 ஏக்கர் 69 செண்ட் அளவுள்ள புஞ்சை நிலம் இதில் பொதுவில் பிரிவில்லாத மொத்த பாகம் 2ல் பிரிவினை இல்லாத பெரியணன் பாகம் நீக்கி ராமையா அவர்களின் பிரிவினை இல்லாத 1 பாகமான 1 ஏக்கர் 34.5 செண்டில் மொத்த பாகமான 6 பங்கில் ராஜாராம் ஆகிய தங்களின் 1 பங்கு நீக்கி எங்களின் பிரிவினை இல்லாத 5 பங்கான 1 ஏக்கர் 12,08 செண்ட் மட்டும் பட்டா எண்:390 (1)09.00 ஏர்ஸ்க்கு நான்கு மால்: வடக்கே : கோதண்ட நாச்சியப்பன்–1, செல்லியஊரணி, தெற்கே–வாய்கால் ஓடை மறுகால், கிழக்கே–குணசேகரன், மேற்கே–செல்லியஊரணி, (2) சர்வே எண்:138/3சி புஞ்சை பரப்பு ஹெக்டேர் 0.49.00 ஏர்ஸ்க்கு 1 ஏக்கர் 21 செண்ட் அளவுள்ள புஞ்சை நிலம் இ'தில் பொதுவில் பிரிவில்லாத மொத்த பாகம் 2ல் பிரிவினை இல்லாத பெரியணன் பாகம் 1 நீக்கி, ராமையா அவர்களின் பிரிவினை இல்லாத 1 பாகமான 60.5 செண்டில் மொத்த பாகமான 6 பங்கில் ராஜாராம் ஆகிய தங்களின் 1 பங்கு நீக்கி எங்களின் பிரிவினை இல்லாத 5 பங்கான 50.42 மட்டும் பட்டா எண்

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.04.22 17:50:39 +0530

390 ல் 0.49.00 ஏர்ஸ்–க்கு நான்கு மால்:– வடக்கே –வாய்கால் ஓடை மறுகால், தெற்கே–பிச்சைவேளார், கிழக்கே–கர்ணன், வாய்கால் ஓடை மறுகால், மேற்கே செல்லியராணி (3)சர்வே எண்:139/1 புஞ்சை பரப்பு ஹெக்டேர் 1.14.00 ஏர்ஸ்–க்கு 2 ஏக்கர் 81.5 செண்ட் அளவுள்ள புஞ்சை நிலம் இதில் பொதுவில் பிரிவில்லாத மொத்த பாகம் 2ல் பிரிவினை இல்லாத பெரியணன் பாகம் 1 நீக்கி ராமையா அவர்களின் பிரிவினை இல்லாத 1 பாகமான 1 ஏக்கர் 40.7 செண்டில், மொத்த பாகமான 6 பங்கில் ராஜாராம் ஆகீய தங்களின் 1 பங்கு நீக்கி எங்களின் பிரிவினை இல்லாத 5 பங்கான 1 ஏக்கர் 17,3 செண்டு, பட்டா எண்:390 ல் 1.14.00 ஏர்ஸ்க்கு நான்குமால்: வடக்கே–அருணகிரி, தெற்கே – குணசேகரன்–1, கலைச்செல்வி–2, கிழக்கே–அழகம்மாள், மேற்கே செல்வமணி–1, ராமசந்திரன்–2 ஆகியவற்றை பாகபாத்திய விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளது தெரிய வருகிறது.

10(14). பி.வா.சா.ஆ.5 ஆவணத்தை பரிசீலிக்கையில் திருப்பத்தூர் வட்டம், 74 மாம்பட்டி கிராம சர்வே எண்:191/14 (பழைய சர்வே எண்:70/1பா) 6.03.5 ஹெக்டேர் நத்தம் நிலத்திற்கு ராமையா மக்கள் நல்லகருப்பன் கருணாநிதி, இராஜாராம் ஆகியோர்கள் பெயரில் 422 என பட்டா வழங்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

10(15). பி.வா.சா.ஆ.6 ஆவணத்தை பரிசீலிக்கையில் ராஜாராம் என்பவர் பெயரில் உள்ள வீட்டு வரி ரசீதுகளாகும். பி.வா.சா.ஆ–7 ஆவணமானது பதிவு செய்யப்பட்ட பாகவிடுதலை பத்திரம் மற்றும் சர்வே எண்:121/8 பின் 10(1) கணிணி பட்டாவாகும். பி.வா.சா.ஆ.7 ஆவணத்தை பரிசீலிக்கையில் 01.11.2023ம் தேதி சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், எஸ்.மாம்பட்டி கிராமம், கதவு எண்:509 என்ற முகவரியில் வசித்து வரும் ராமையா மகன் ராஜாராம் என்பவருக்கு சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், எஸ்.மாம்பட்டி கிராமம், கதவிலக்கம் 509 என்ற முகவரியில் வசித்து வரும் ராமையா மகள் நீலாவதி (1), சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், எஸ்.மாம்பட்டி கிராமம்,

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.22 17:50:47 +0530

கதவிலக்கம் 10ஏ/176 என்ற முகவரியில் வசித்து வரும் ராமையா குமாரர் கருணாநிதி (2), சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், எஸ்.மாம்பட்டி கிராமம், கதவு எண்:2/3 என்ற முகவரியில் வசித்து வரும் ராமையா மகள் மூர்த்தி அவர்களின் மனைவியுமான ராகினி (3), சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், எஸ்.மாம்பட்டி கிராமம், கதவு எண்: 46 என்ற முகவரியில் வசித்து வரும் ராமையா மகளும் அறிவுசெல்வம் மனைவியுமான மருந்தாயி (4), சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், ச.ச.கோட்டை எஸ்.மாத்தூர் சூரிய நகர் கதவு எண்:114 என்ற முகவரியில் வசித்து வரும் ராமையா மகளும், ஜெயராமன் மனைவியுமான நவமணி (5) ஆகியோர்கள் சேர்ந்து சர்வே எண்:224/11 நஞ்சை பரப்பு ஹெக்டேர் 0.2.50 ஏர்ஸ்–க்கு செண்டு 6 அளவுள்ள நஞ்சை நிலம் இதில் பொதுவில் பிரிவில்லாத மொத்த பாகம் 6ல் தங்கள் பாகம் (ராஜாராம்) 1 நீக்கி, எங்களது பாகம் 5க்கு 5 செண்ட் மட்டும் பட்டா எண்:755ல் 0.2.50 ஏர்ஸ்க்கு நான்குமால்: வடக்கே சர்வே எ்:224/10ஏ யோகலெட்சுமி, சர்வே எண்:224/10பி ஜெகநாதன், கிழக்கே சர்வே எண்:224/12 முத்தையா சேர்வை, தெற்கே சர்வே எண்:223/5 காந்தி, மேற்கே சர்வே எண்:224/17 ராமையா (2) சர்வே எண்:286/4 நஞ்சை பரப்பு ஹெக்டேர் 0.13.00 ஏர்ஸ்க்கு செண்டு 32 அளவுள்ள நஞ்சை நிலம் இதில் பொதுவில் பிரிவில்லாத மொத்த பாகம் 6ல் தங்கள் பாகம் (ராஜாராம்) 1 நீக்கி, தங்களது பாகம் 5க்கு 26.6 செண்ட் மட்டும் பட்டா எண்:755ல் 0.13.00 ஏர்ஸ்க்கு நான்குமால்: வடக்கு சர்வே எண்:220/2 திலகவாணி, கிழக்கே சர்வே எண்:286/6 வெள்ளைச்சாமி, தெற்கே சர்வே எண்:286/5 முத்தாயி, மேற்கே சர்வே எண்:286/3 மருந்தாயி, (3) சிவகங்கை ரிடி, மதகுபட்டி சப்டி, மாம்பட்டி தேவஸ்தானம் கிராமத்தில் சர்வே எண் 121/8பி நஞ்சை பரப்பு ஹெக்டேர் 0.49.00 ஏர்ஸ்க்கு 1 ஏக்கர் 21 செண்ட் அளவுள்ள நஞ்சை நிலம் இதில் பொதுவில் பிரிவில்லாத மொத்த பாகம் 6ல் தங்கள் பாகம் (ராஜாராம்) 1 நீக்கி எங்களது பாகம் 5க்கு 1 ஏக்கர் 0.8 செண்டு மட்டும் பட்டா எண்: 268ல் 0.49.00 ஏர்ஸ்க்கு நான்குமால்:வடக்கே சிட்டி ஏந்தல் கண்மாய், கிழக்கே வெள்ளைக்கண்ணு

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.22 17:50:55 +0530

நாடார்–1, ஜெயக்குமார்–2, தெற்கே சின்னையா, மேற்கே சேவுகப்பெருமாள் ஆகிய சொத்துக்களை பாகவிடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளது தெரிய வருகிறது. மற்றும் சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், மாம்பட்டி தேவஸ்தானம் சர்வே எண்:121/8 பில் 0.49.00 ஹெக்டேர் புன்செய் நிலம் ராமையா மகன் ராஜாராம் பெயரில் பட்டா எண்:974 வழங்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

10(16). பி.வா.சா.ஆ.8 ஆவணத்தை பரிசீலிக்கையில் மனுதாரர் ராஜாராம் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் 482 சிஆர்.பி.சி கீழ் தாக்கல் செய்த மனு Crl.O.P.(MD) No:12310 நாள்:04.11.2020 உத்தரவிடப்பட்டுள்ளது தெரிய வருகிறது. பி.வா.சா.ஆ.9 ஆவணத்தை பரிசீலிக்கையில் கொப்பாள், மருந்தாயி, ஒய்யம்மாள், ஜெயமணி, ஜெயலலிதா என்பவர்கள் வாதிகளாக இருந்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துககட்டளை கோரி தாக்கல் செய்த வழக்கு எ.எஸ்.எண்:111/2002 –ற்கான தீர்ப்பாணையாகும். பி.வா.சா.ஆ.10 ஆவணத்தை பரிசீலிக்கையில் ராஜாராம் வாதியாக இருந்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துககட்டளை கோரி தாக்கல் செய்த வழக்கு முதலேற்பு வழக்கு எண்:26/98–ற்கான தீர்ப்பாணையாகும்.

10(17). வாதியின் தாத்தா கரந்தப்பன் என்பவருக்கு காவேரி (எ) பெரியணன் என்பவரும் ராமையா என்பவரும் வாரிசுகள் என்பதிலும், காவேரி (எ) பெரியணன் மனைவி 7ம் பிரதிவாதி, அவரது மக்கள் வாதியும், 8 முதல் 11 பிரதிவாதிகள் என்பதிலும், ராமையாவின் மக்கள் 1 முதல் 6 பிரதிவாதிகள் என்பதிலும் தரப்பினர்களுக்கிடையே மாற்று கருத்து இல்லை. அதாவது, மேற்படி சங்கதிகளை வழக்கின் தரப்பினர்கள் ஒப்புக் கொள்கிறார்கள்.

10(18). வழக்கு சொத்தில் ½ பாகம் பெறுவதற்கு வாதி உரிமையுடையவரா? என்பதை ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டும். வாதி தரப்பில் தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்றும் தனக்கும் பிரதிவாதிகளுக்கும் இடையே பாகம் ஏற்படவில்லை என்று கூறப்படுகிறது. பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்துக்கள்

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.22 17:51:02 +0530

பாகம் பிரிக்கப்பட்டு 1,2 பிரதிவாதிகள் அனுபவத்தில் உள்ளது என்று கூறப்படுகிறது.

10(19). வாதி தனது பிராதில் தாவா 1வது இலக்க சொத்தில் மேற்கு பக்கம் சரிபாதி பாகத்தை வாதியின் தந்தையும் கிழக்கு பக்கம் சரிபாதி பாகத்தை அவரின் தம்பி ராமையாவும் அனுபவித்தும் அதிலிருக்கும் கிணறை பொதுவாக வைத்து தண்ணீர் எடுத்து நீர்பாசனம் செய்து வருவதாக கூறியுள்ளார்.

10(20). வா.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் 1வது இலக்க சொத்து 60 செண்டில் 1 ஏக்கர் 10 செண்டில் 50 செண்ட் தனது தகப்பனார் பெயரிலும், 60 செண்டு தனது தகப்பனார் பெயரிலும், 1ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயரிலும் கூட்டுபட்டாவாக உள்ளது என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

10(21). பிரதிவாதிகள் தனது எதிர்வழக்குரையில் 1வது இலக்க சொத்தின் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 10 செண்ட்–ல் வாதியின் தகப்பனார் காவேரி பெரியணன் பெயரில் சர்வே எண்:280/2எ–ல் 50 செண்ட் தனிபட்டாவாக உள்ளது என்றும் மீதமுள்ள 60 செண்ட் சர்வே எண்:280/2பி–ல் வாதியின் தகப்பனார் காவேரி பெரியணன் பெயரிலும், பிரதிவாதிகளின் தகப்பனார் ராமையா பெயரிலும் கூட்டுபட்டாவாக உள்ளது என்று கூறியுள்ளார்.

10(22). பி.வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில் தற்காலிக குடும்ப ஏற்பாட்டின்படி தாவா 1ம் இலக்க சொத்தில் மேற்கே வாதியின் தந்தையும், கிழக்கே எனது தந்தையும் பொதுவான கிணற்றின் மூலம் நீர்பாசனம் செய்து அனுபவித்து வந்தோம் என்றால் இல்லை என்றும் மேற்கே 60 செண்ட் எனது பெரியப்பாவும், கிழக்கே 60 செண்ட் எனது அப்பாவும் அனுபவித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

10(23). வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலிக்கையில் சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், மாம்பட்டி வடக்கு கிராமம் சர்வே எண்:280/2Bல் 0.24.00 ஹெக்டேர் கரந்தப்பன் மக்கள் ராமையா,

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.22 17:51:10 +0530

காவேரி ஆகியோர்கள் பெயரில் 1057 கூட்டு பட்டா வழங்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

10(24). பி.வா.சா.ஆ–7 ஆவணத்தை பரிசீலிக்கையில் சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், மாம்பட்டி வடக்கு கிராமம் சர்வே எண்:280/2Bல் 0.49.00 ஹெக்டேர் கரந்தப்பன் மகன் ராமையா பெயரில் 268 பட்டா வழங்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது. எனவே தாவா 1வது இலக்க சொத்து 1 முதல் 6 பிரதிவாதிகளின் தகப்பனார் ராமையா பெயரில் எவ்வகையில் தனிபட்டாவாக மாற்றப்பட்டது என்பதற்கான ஆவணங்கள் எதுவும் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை.

10(25). வாதி தனது பிராதில் 2வது இலக்க சொத்தில் மேற்கு பக்கம் சரிபாதி பாகத்தை வாதியின் தந்தை காவேரி (எ) பெரியணனும், கிழக்கு பக்கம் சரிபாதி பாகத்தை அவரது சகோதரர் ராமையாகவும் அனுபவித்து வந்ததாக கூறியுள்ளார்.

10(26). வா.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் 2வது இலக்க சொத்து 7 செண்ட் முழுவதும் 1ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயரில் கிரையம் பெற்ற சொத்து என்பதால் நான் உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல என்று சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.ஆ–2 ஆவணத்தை பரிசீலிக்கையில் சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், மாம்பட்டி வடக்கு கிராமம் சர்வே எண்:224/11ல் 0.2.50 ஹெக்டேர் நன்செய் நிலம் கரந்தப்பன் மகன் ராமையா பெயரில் 755 பட்டா வழங்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

10(27). பி.வா.சா.ஆ.3 ஆவணத்தை பரிசீலிக்கையில் 05.12.1974ம் தேதி இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், மாம்பட்டியிலிருக்கும் கரந்தான் மகன் ராமையாவுக்கு, மாம்பட்டி சேகரம், தும்பபட்டியிலிருக்கும் தவமணி மகன் மாதவன் தனக்காகவும், தன் மகன் மைனர் பெயரிடாத ஆண்குழந்தைக்காகவும் கார்டியனாகவும் மாதவன் என்பவர் இராமநாதபுரம் மாவட்டம், மதகுபட்டி சப்டி, மாம்பட்டி கிராமம், வடக்கு மாம்பட்டியில், திருமங்கல கண்மாய் பாசன சர்வே

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.22 17:51:19 +0530

எண்:224/11 ஆத்தியடி நாற்றங்கால் செண்டு 6ம் அதற்குட்பட்ட சகல விதங்களையும் கிரையம் செய்து கொடுத்துள்ளது தெரிய வருகிறது. எனவே தாவா 2வது இலக்க சொத்து ராமையா என்பவர் பெயருக்கு கிரையம் பெறப்பட்ட சொத்தாகும். தாவா 2வது இலக்க சொத்து பிரதிவாதிகளின் தகப்பனார் ராமையா பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது தெரிய வருகிறது. தாவா 2வது இலக்க சொத்து இறங்குரிமை படி 1 முதல் 6 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பது தெரிய வருகிறது.

10(28). தாவா 2வதுஇலக்கச் சொத்து 1 முதல் 6 பிரதிவாதிகளின் தந்தையான ராமையாவிற்கு கிரைய சொத்து என்பது தெரிய வருகிறது. ராமையாவின் கிரைய சொத்தில் பாகம் கோர வாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை. எனவே 2வதுஇலக்கச் சொத்தில் வாதி கோரிய ½ பாகம் வாதிக்கு கிடைக்கக்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

10(29). வாதி தரப்பில் தாவா 3வது இலக்க சொத்தில் கிழக்கு பக்கம் சரிபாதி பாகத்தை வாதியின் தந்தையும், மேற்கு பக்கம் சரிபாதி பாகத்தை அவரின் தம்பி ராமையாவும் அனுபவித்து வந்தனர் என்று கூறியுள்ளார். பி.வா.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் தாவா 3ம் இலக்க சொத்தில் கிழக்கே 1 ஏக்கர் 40 செண்ட் எனது பெரியப்பாவிற்கும் மேற்கே 1 ஏக்கர் 40 செண்ட் அனுபவிப்பதற்காக தற்காலிக ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான் என்றும் ஆனால் தற்காலிகமாக ஒதுக்கப்படவில்லை, முழுமையாக பிரித்து கொண்டார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

10(30). வா.சா.ஆ–3 ஆவணத்தை பரிசீலிக்கையில் சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், மாம்பட்டி தேவஸ்தானம் கிராமம் சர்வே எண்:139/1ல் 1.14.00 ஹெக்டேர் கரந்தப்பன் மக்கள் பெரியணன், இராமையா ஆகியோர்கள் பெயரில் 390 பட்டா வழங்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது. எனவே தாவா 3வது இலக்க சொத்து பெரியணன், ராமையா பெயரில் கூட்டு பட்டாவாக உள்ளது தெரிய வருகிறது.

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.22 17:51:28 +0530

10(31). பி.வா.சா.ஆ.4 ஆவணத்தை பரிசீலிக்கையில் 01.11.2023 ம் தேதி சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், எஸ்.மாம்பட்டி கிராமம், கதவு எண்:509 என்ற முகவரியில் வசித்து வரும் ராமையா மகன் ராஜாராம் என்பவருக்கு சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், எஸ்.மாம்பட்டி கிராமம், கதவிலக்கம் 509 என்ற முகவரியில் வசித்து வரும் ராமையா மகள் நீலாவதி (1), சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், எஸ்.மாம்பட்டி கிராமம், கதவிலக்கம் 10 ஏ/176 என்ற முகவரியில் வசித்து வரும் ராமையா குமாரர் கருணாநிதி (2), சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், எஸ்.மாம்பட்டி கிராமம், கதவு எண்:2/3 என்ற முகவரியில் வசித்து வரும் ராமையா மகள் மூர்த்தி அவர்களின் மனைவியுமான ராகினி (3), சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், எஸ்.மாம்பட்டி கிராமம், கதவு எண்: 46 என்ற முகவரியில் வசித்து வரும் ராமையா மகளும் அறிவுசெல்வம் மனைவியுமான மருந்தாயி (4), சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், ச.ச.கோட்டை எஸ்.மாத்தூர் சூரிய நகர் கதவு எண்:114 என்ற முகவரியில் வசித்து வரும் ராமையா மகளும், ஜெயராமன் மனைவியுமான நவமணி (5) ஆகியோர்கள் சேர்ந்து சிவகங்கை ரிடி, மதகுபட்டி சப்டி, மாம்பட்டி தேவஸ்தானம் கிராமத்தில் (1)சர்வே எண்:138/3 ஏ புஞ்சை பரப்பு ஹெக்டேர் 1.9.00 ஏர்ஸ்க்கு 2 ஏக்கர் 69 செண்ட் அளவுள்ள புஞ்சை நிலம் இதில் பொதுவில் பிரிவில்லாத மொத்த பாகம் 2ல் பிரிவினை இல்லாத பெரியணன் பாகம் நீக்கி ராமையா அவர்களின் பிரிவினை இல்லாத 1 பாகமான 1 ஏக்கர் 34.5 செண்டில் மொத்த பாகமான 6 பங்கில் ராஜாராம் ஆகிய தங்களின் 1 பங்கு நீக்கி எங்களின் பிரிவினை இல்லாத 5 பங்கான 1 ஏக்கர் 12.08 செண்ட் மட்டும் பட்டா எண்:390 ல் சர்வே எண்:139/1 புஞ்சை பரப்பு ஹெக்டேர் 1.14.00 ஏர்ஸ்–க்கு 2 ஏக்கர் 81.5 செண்ட் அளவுள்ள புஞ்சை நிலத்தை பாகபாத்திய விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளது தெரிய வருகிறது.

10(32). பி.வா.சா.ஆ.10 யை பரிசீலிக்கையில் பி.வா.சா.ஆ.10 ஆனது முதலேற்பு வழக்கு எண் 26/1998 ன் தீர்ப்பாணையாகும். மேற்கண்ட முதலேற்பு

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.22 17:51:35 +0530

வழக்கை 1ம் பிரதிவாதி 7 முதல் 11, 2வது பிரதிவாதிக்கு எதிராக 4வது இலக்கச் சொத்தான மாம்பட்டி கிராம சர்வே எண் 191/14 ல் உள்ள ஓட்டு வீடு, கூரை கூடம் ஆகியவைகள் தனக்கு பாத்தியம் என்று விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக விளம்புகை பரிகாரம் பிறப்பிக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது. மேலும் பி.வா.சா.ஆ.9 யை பரிசீலிக்கையில் 7 முதல் 11 பிரதிவாதிகள் மேற்கண்ட முதலேற்பு வழகக்கு எண்26/1998–ல் பிறப்பிக்கப்பட்ட விளம்புகை பரிகார உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு தாக்கல் செய்து, மேற்படி மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது. 4வது இலக்கச் சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக விளம்புகை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது. அதன் அடிப்படையில் 1ம் பிரதிவாதி 4வது இலக்கச் சொத்தின் உரிமையாளராவார். இந்நிலையில் 4வது இலக்க சொத்து வாதியின் பூர்வீக சொத்து என்பதை வாதி உரிய சான்றுகள் மூலம் நிரூபணம் செய்யவில்லை.

10(33). வாதி தரப்பில் மேற்கண்ட முதலேற்பு வழக்கு எண்26/1998ல் தான் தரப்பினர் அல்ல என்றும் மோசடியாக மேற்படி உத்தரவு 1ம் பிரதிவாதியால் பெறப்பட்டதால் மேற்படி தீர்ப்பு தன்னை கட்டுப்படுத்தாது என்று வாதம் முன்வைக்கப்பட்டது.

10(34). வாதி முதலேற்பு வழக்கு எண் 26/1998 மற்றும் மேல்முறையீட்டு வழக்கு எண் 111/2002ல் ஏற்பட்ட தீர்ப்பாணையானது தன்னை தரப்பினராக சேர்க்காமல் 1ம் பிரதிவாதியால் மோசடியாக பெறப்பட்டது என்று மேற்கண்ட தீர்ப்பாணையை எதிர்த்து எவ்வித வழக்கும் தாக்கல் செய்யாத நிலையில், மேற்கண்ட தீர்ப்பு, தீாப்பாணையில் ஏற்பட்ட தீர்ப்பு வாதியை கட்டுப்படுத்தாது என்ற வாதி தரப்பு வாதம் ஏற்புடையதாக இல்லை.

10(35). தாவா 3,5,6 இலக்கச் சொத்துக்கள் வாதி மற்றும் பிரதிவாதிகளின் பிரிக்கப்படாத பூர்வீக சொத்துக்களா? என்பதை பரிசீலிக்கையில் 3 முதல் 6 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திய பி.வா.சா.ஆ.4 பாக பாத்திய

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.22 17:51:42 +0530

விடுதலை பத்திரத்தினை பரிசீலிக்கையில் 3 முதல் 6 பிரதிவாதிகள் அனைவரும் இதில் பொதுவில் பிரிவில்லாத மொத்த பாகம் 2ல் பிரிவினை இல்லாத பெரியணன் பாகம் 1 நீக்கி ராமையா அவர்களின் பிரிவினையில்லாத 1 பாகத்தில் உள்ள மொத்தம் 6 பங்கு நம் அனைவரின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்று கண்டு பி.வா.சா.ஆ–4 பாகபாத்திய விடுதலை பத்திரம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது தெரிய வருகிறது. எனவே 3 முதல் 6 பிரதிவாதிகள் தாவா 3,5,6 இலக்கச் சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்பதையும், மேற்கண்ட சொத்துக்களை பொறுத்து 01.11.2023ம் தேதி வரை வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு இடையே பாக பிரிவினை ஏற்படவில்லை என்பதை ஒப்புக் கொண்டுள்ளனர்.

10(36). தாவா 7வது இலக்க சொத்து வாதி மற்றும் பிரதிவாதிகளின் பிரிக்கப்படாத பூர்வீக சொத்துக்களா? என்பதை பரிசீலிக்கையில் 3 முதல் 6 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திய பி.வா.சா.ஆ.7 பாக பாத்திய விடுதலை பத்திரத்தினை பரிசீலிக்கையில் 3 முதல் 6 பிரதிவாதிகள் அனைவரும் இதில் பொதுவில் பிரிவில்லாத மொத்த பாகம் 2ல் பிரிவினை இல்லாத பெரியணன் பாகம் 1 நீக்கி ராமையா அவர்களின் பிரிவினையில்லாத 1 பாகத்தில் உள்ள மொத்தம் 6 பங்கு நம் அனைவரின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்று கண்டு பி.வா.சா.ஆ.7 பாகபாத்திய விடுதலை பத்திரம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது தெரிய வருகிறது. எனவே 3 முதல் 6 பிரதிவாதிகள் தாவா 7வது இலக்க சொத்துக்கள் பூர்வீக சொத்து என்பதையும், மேற்கண்ட சொத்தை பொறுத்து 01.11.2023ம் தேதி வரை வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு இடையே பாக பிரிவினை ஏற்படவில்லை என்பதை ஒப்புக் கொண்டுள்ளனர்.

10(37). வழக்கு சொத்து ஆதியில் கரந்தப்பனுக்கு பாத்தியப்பட்டதாக இருந்த நிலையில் அவரது காலத்திற்கு பின்னர் அவரது வாரிசுகளான காவேரி பெரியணன் மற்றும் அவரது சகோதரரான ராமையாவிற்கு இறங்குரிமையாக சென்றடையும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. இந்நிலையில்,

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.22 17:51:49 +0530

வழக்கு சொத்தை பொறுத்து காவேரி பெரியணனும், ராமையாவும் தங்களது வாழ்நாளில் தங்களது வாரிசுகளுக்கு எந்தவொரு ஆவணமும் எழுதி வைக்காத நிலையில், 1,3,5,6,7 இலக்க தாவா சொத்துக்களை வாய்மொழியாக காவேரி பெரியணனும், ராமையாவும் பிரித்து கொண்டதனால் மேற்படி தாவா சொத்துக்களின் மீது பிரதிவாதிகளுக்கு முழுஉரிமை ஏற்பட்டது என்று பிரதிவாதிகளின் கோரிக்கையை இந்நீதிமன்றம் ஏற்க மறுக்கிறது.

10(38). பி.வா.சா.ஆ–4 மற்றும் பி.வா.சா.ஆ.7 ஆவணங்களான பதிவு செய்யப்பட்ட பாகவிடுதலை பத்திரத்தில் பொதுவில் உள்ள பாகம் பிரிக்கப்படாத சொத்துக்கள் என குறிப்பிடப்பட்டுள்ள தாவா 1,3,5,6,7 இலக்கச் சொத்துக்கள் தனக்குரிய 1/2 பாகத்தினை பிரிக்க கோரிய சங்கதி இவ்வழக்கிற்கான வழக்குமூலம் ஏற்பட்ட சங்கதியும் தெரிய வருகிறது.

10(39). ஒருவர் தனக்கு பாத்தியப்பட்ட சொத்தை பொறுத்து எந்தவொரு ஏற்பாடும் செய்யாமல் இறந்து விட்டால் அவரது சொத்துக்களை இறந்து விட்டவரின் வாரிசுகள் அடையவார்கள் என்பதில் மாற்று கருத்து இருக்க முடியாது. இவ்வழக்கில் வழக்கு சொத்து கரந்தப்பனுக்கு பாத்தியப்பட்டு காவேரி (எ) பெரியணன், ராமையா ஆகியோர்களை வாரிசாக விட்டு எந்தவொரு ஏற்பாடும் செய்யாமல் இறந்து விட்டார். இந்நிலையில் வழக்கு சொத்தின் மீது காவேரி பெரியணன், ராமையா ஆகியோர்களுக்கு 1/2 பங்குரிமை ஏற்பட்டிருக்கிறது. காவேரி பெரியணன் இறந்து விட்ட நிலையில் அவருக்கு பாத்தியப்பட்ட 1/2 பாகம் அவரது வாரிசான வாதி, 8 முதல் 11 பிரதிவாதிகளுக்கு இறங்குரிமையாக கிடைத்து விடும் என்பதில் மாற்று கருத்து இல்லை.

10(40). வாதி தரப்பில் தனது தந்தை காவேரி பெரியணன் உயிருடன் இருந்த காலத்தில் வாதியின் தாயாரான 7 ம் பிரதிவாதிக்கும் மகள்களான 8 முதல் 11 பிரதிவாதிகளுக்கும் சொத்துக்களை தனித்தனியாக சொத்து விட்டார் என்றும் பூர்வீக சொத்து உள்ளிட்ட எஞ்சிய சொத்துக்களில் 7 முதல் 11 பிரதிவாதிகளுக்கு யாதொரு பாக பாத்தியமும் கிடையாது என்று வாதம்

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.22 17:51:55 +0530

முன்வைக்கப்பட்டது. தாவா சொத்துக்களான 1,3,5,6,7 இலக்க சொத்துக்கள் பொதுவில் பிரிக்கப்படாத பூர்வீக சொத்துக்கள் என்பதால் வாதியின் தந்தை காவேரிபெரியணன் இறப்பிற்கு பிறகு இறங்குரிமைப்படி 7 முதல் 11 பிரதிவாதிகளையும் வந்தடையும் என்பதால் வாதி தரப்பு வாதம் ஏற்றுக் கொள்ளும் விதமாக இல்லை. இந்நிலையில், தாவா 1,3,5,6,7 இலக்க சொத்துக்களில் வாதி மற்றும் 7 முதல் 11 பிரதிவாதிகளுக்கு 1/12 பங்கு உரிமை உள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. ஆகையினால் வழக்குரையில் கோரியவாறு தாவா 1,3,5,6,7 இலக்க சொத்துக்களில் வாதி மற்றும் 7 முதல் 11 பிரதிவாதிகளுக்கு 1/12 பாகம் பெறுவதற்கு முதல்நிலை தீர்ப்பாணை பெற வாதி உரிமையுடைவர் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து 1 மற்றும் 2 எழுவினாக்களுக்கு தீர்வு காணப்படுகிறது.

**11. <u>வழக்கெழுவினா 3–ன் மீதான தீர்முடிவு</u>:–**

3. இதர பரிகாரங்கள் என்ன?

வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளை கவனத்தில்கொண்டு பார்க்கும்போதும் இவ்வழக்கின் முந்தைய எழுவினாக்களுக்கு வாதிக்கு ஆதரவாக தீர்வு கண்டுள்ள நிலையில் இவ்வழக்கில் வாதிக்கு வேறு பரிகாரம் வழங்குவதற்கில்லை என்றும், அவரவர் செலவுத்தொகையினை அவரவரே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**<u>இறுதிமுடிவு</u>**

1. இறுதியாக இவ்வழக்கு பகுதியாக அனுமதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

2. தாவா 2,4ம் இலக்க சொத்துக்களை பொறுத்து வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என தீர்ப்பளிக்கப்படுகிறது.

3. தாவா 1,3,5,6,7 இலக்கச் சொத்துக்களை பொறுத்து வாதி மற்றும் 7 முதல் 11 பிரதிவாதிகளுக்கு 1/12 பாகம் பிரித்து கொடுக்க முதல் நிலை தீர்ப்பாணை வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.22 17:52:02 +0530

4. அவரவர் செலவுத்தொகையினை அவரவரே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்து, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026–ஆம் ஆண்டு ஏப்ரல் 22–ம் நாள் புதன்கிழமை இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.04.22 17:52:12 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
சிங்கம்புணரி

**வாதி தரப்பு சாட்சி:–**

| | |
|---|---|
| வா.சா.1 | ஜெகஜோதி பெரியகருப்பன் (வாதி) |
| வா.சா.2 | மோகன்தாஸ் |

**வாதி தரப்பு சான்றாவணங்கள்:–**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 29.08.2017 | பட்டா எண்:1057 10(1) கணிணி பட்டா |
| வா.சா.ஆ.2 | 29.08.2017 | பட்டா எண்:755 10(1) கணிணி பட்டா |
| வா.சா.ஆ.3 | 11.09.2017 | பட்டா எண்:390 10(1) கணிணி பட்டா |
| வா.சா.ஆ.4 | 1998–1999 | வீட்டு வரி ரசீது அசல் |
| வா.சா.ஆ.5 | 2003–2004<br>2007–2008 | வீட்டு வரி ரசீது அசல் |
| வா.சா.ஆ–6 | 2009–2010 | வீட்டு வரி ரசீது அசல் |
| வா.சா.ஆ.7 | – | வம்சா வழி ஜாபிதா அசல் |
| வா.சா.ஆ–8 | – | சர்வே எண்:121/8 க்கான எஸ்எல்ஆர் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.9 | 01.11.2023 | பாக விடுதலை பத்திரம் சான்றிட்ட நகல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்:–**

| | |
|---|---|
| பி.வா.சா.1 | ராஜாராம் (1 ம் பிரதிவாதி) |
| பி.வா.சா.2 | சுகதேவன் |

**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:–**

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | - | சர்வே எண்:280/2 ற்கான வில்லங்க சான்று நகல் |
| பி.வா.சா.ஆ.2 | - | சர்வே எண்:280/2 ற்கான அ பதிவேடு சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.3 | 05.02.1974 | கிரைய பத்திரம் அசல் |

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.4 | 01.11.2023 | பாகவிடுதலை பத்திரம் அசல் |
| பி.வா.சா.ஆ.5 | 19.01.1994 | பட்டா எண்:422 அசல் |
| பி.வா.சா.ஆ.6 | - | வீட்டு வரி ரசீதுகள் அசல் |
| பி.வா.சா.ஆ.7 | 01.11.2023 | பாகவிடுதலை பத்திரம் அசல் மற்றும் பட்டா எண்:974 10(1) கணிணி பட்டா |
| பி.வா.சா.ஆ.8 | 04.11.2020 | CrlOP (MD)No:12310/2010 மாண்புமிகுசென்னை உயர்நீதிமன்ற உத்தரவு அசல் |
| பி.வா.சா.ஆ.9 | 20.09.2004 | மேல்முறையீட்டு வழக்கு எண்:111/2002 தீர்ப்பாணை சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.10 | 22.09.2000 | முதலேற்பு வழக்கு எண்:26/1998 தீர்ப்பாணை சான்றிட்ட நகல் |

/ உண்மை நகல்/

ABARNA GUNASEKAR

Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.22 17:52:25 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
சிங்கம்புணரி